1993 ஏப்ரல் 16]

364—

மண்டல அலுவலகங்களில் மேல்நிலைத் தேர்வுகள் நடத்தும் திட்டம்.

* 11348—திரு. து. மூர்த்தி, திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைத் தேர்வுகள் மண்டல அலுவலகங்களில் நடத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே

(அ) தமிழ்நாட்டில் பிளஸ்-2 தேர்வுகள் மண்டல அலுவலகங்களால் நடத்தும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் 10ஆம் வகுப்புக்குத் தேர்வு எழுதும்போது அதற்கான சர்ட்டிபிகேட் வெரிபிகேஷன் மற்றும் சோதனை செய்வதற்குத் தலைமையிடம் சென்னையாக இருந்தாலும், மண்டல அலுவலகம் திருச்சியில் இருக்கிறது. அதனால் மாணவர்களின் குறைகளை உடனுக்குடன் எளிதில் தீர்க்க முடிகிறது. அதைப்போல மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் நலனையும் கருத்திற்கொண்டு, திருச்சியில் மேல்நிலைப் பள்ளிகளுக்கு என்று மண்டல அலுவலகம் ஆரம்பித்து, அந்த மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் குறைபாடுகளை உடனுக்குடன் போக்குவதற்கு தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வுத் துறையின் சார்பாக மண்டல அலுவலகம் ஏற்கெனவே இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 10ஆம் வகுப்புத் தேர்வை பொறுத்த மட்டில் அவர்கள் உடனடியாகச் சில பிரச்சினைகளைத்

தீர்க்க முடிகிறது என்றும், 12வது வகுப்பு தேர்வு சம்பந்தமாகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை என்றும் அவர்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது. அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருந்தாலும்கூட, இன்றைக்கு பிளஸ் 2 மாணவர்கள் பரீட்சையிலே தேர்ச்சி பெற்ற பிறகு, சில சந்தர்ப்பங்களில் ரீவேல்யுவேஷன் வேண்டுமென்று சொன்னால் சென்னைக்கு வர வேண்டியிருக்கிறது. அதைப்போன்றே சான்றிதழில் ஏதாவது தவறுகள் இருந்து, அதைத் திருத்த வேண்டுமென்றாலும் கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற தூர மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து, அந்த அலுவலகங்களுக்குச் சென்று சரி செய்துகொள்ள பல இடங்களில் மாணவர்கள் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். பல நேரங்களில் எங்கே போவது என்று கூடத் தெரியாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட அவல நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எப்போது அதைப் பரிசீலிக்கப் போகிறார்கள்? இந்த ஆண்டே பரிசீலிப்பார்களா அல்லது அடுத்த ஆண்டு பரிசீலித்து 10ஆம் வகுப்புக்கு இருப்பது போல், 12-வது வகுப்புக்கும் மண்டல அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அவ்வளவு சுலபமான பிரச்சினையல்ல. 10வது வகுப்பிலே அவர்கள் பாசானால் 11வது வகுப்பிலே சேரும் ஒரே ஒரு பிரச்சினைதான் இருக்கிறது. ஆனால் 12ஆம் வகுப்பு தேர்வு என்பது இன்ஜினியரிங் காலேஜிலும் மெடிகல் காலேஜிலும் சேருவதற்கு வேண்டிய தகுதியைப் பெறுவதற்கான தேர்வாக இருப்பதால், இதில் வேறுவிதமான தவறுகளுக்கு இடம் வந்து விடக்கூடாது. எனவே மாணவர்கள் நலனைக் கருதி நாம் ஒன்றைச் செய்கின்றபோது அது பொதுவான நன்மையைப் பாதிக்கின்ற வகையில் வந்துவிடக் கூடாது. ஆகவே நன்கு பரிசீலித்துதான் எதையும் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் இப்போது பிளஸ் 2 தேர்வுகள் நடைபெறுகின்றன. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் கல்லூரிகளைக் கிராமங்களுக்குக்கொண்டுவர வேண்டுமென்றுதான் மேல்நிலைப் பள்ளிகளைக் கொண்டு வந்தார்கள்.

1993 ஏப்ரல் 16]

அந்தப் பள்ளிகளில் பிளஸ் 2 படிக்கும் மாணவர்கள் பிளஸ் 2 பாஸ் செய்துவிட்டு கல்லூரிகளுக்குச் செல்லும்போது, ஒரு புது யுகத்திற்குள் செல்வது போன்ற தோற்றத்தில் போகிறார்கள். ஆகவே பிளஸ் 2 தேர்வினை மட்டும் கல்லூரியுடன் இணைத்து நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 365, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

365—

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் ஏற்படுத்தல்.

*14970—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலகம் ஏற்படுத்தும் கருத்துருவினை அரசு பரிசீலித்து வருகிறது.

முற்பகல் 10-20

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரைத் தலைமையிடமாகக் கொண்ட வட ஆற்காடு மாவட்டமானது, வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம் என்றும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்றும் 2 ஆண்டுகளுக்கு முன்பு பிரிக்கப்பட்டது. பெரும்பாலான அரசுத் துறைகள் திருவண்ணாமலைக்கு வந்துவிட்டன. ஆனால் முதன்மைக் கல்வி அலுவலகம் மட்டும் இன்னும் வரவில்லை. பள்ளிகளில் வளர்ச்சி பற்றியும் அதன் குறைபாடுகள் பற்றியும் முதன்மைக் கல்வி அலுவலரிடம் சென்று பேசுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட சிரமம் ஏற்படுகிறது. ஆகவே இதை வரும் கல்வியாண்டிலாவது கொண்டுவர பரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.